கிராமின் கிருஷி மவுசம் சேவா
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 19-01-2024**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2024-01-19 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2024-01-20 | 2024-01-21 | 2024-01-22 | 2024-01-23 | 2024-01-24 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 3.0 | 2.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 32.0 | 32.0 | 31.0 | 31.0 | 30.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 22.0 | 22.0 | 21.0 | 21.0 | 21.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 14 | 14 | 12 | 12 | 12 |
| காற்றின் திசை (கோணம்) | 50 | 50 | 50 | 70 | 70 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 2 | 1 | 6 | 4 | 4 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் ஜனவரி முதல் வாரத்தில் இலேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 30.0°C - 32.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 21.0°C - 22.0°C. வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு

| |
|---|
| பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 12 - 14 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம் |

## பொது ஆலோசனை:

| |
|---|
| மர வாசனைப் பயிர்களில் பண்ணைக் கழிவுகளை கொண்டு நிலைப்பார்வை அமைத்து மண்ணின் ஈரப்பதம் வீணாகாமல் தடுக்கலாம். |

## குறுஞ்செய்தி :

| |
|---|
| அறுவடை செய்த நெல் விதைகளை தற்போது நிலவும் வறண்ட வானிலை பயன்படுத்தி காய வைத்து ஈரத்தன்மை 13 % கீழ் இருக்குமாறு சேமித்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நிலக்கடலை | கார்த்திகை பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டு உள்ள 40 -70 நாட்கள் உடைய மாணவரி நிலக்கடலை பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சம் உரத்தை பயிருக்கும் செடிகளின் ஓரமாக மண்ணின் ஈரத்தன்மையைப் பொறுத்து. மண்ணைக் கொத்தி ஜிப்சம் இட்டு மண் அணைக்கவேண்டும். |
| உளுந்து | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக பயிர் வகை பயிர்களில் காய் பிடிக்கும் பருவம் சாம்பல் நோய் வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தேவைப்பட்டால் நனையும் கந்தகம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்கவும் . |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| முந்திரி | முந்திரியில் காணப்படும் தேயிலை கொசு தாக்கத்தை |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | கட்டுப்படுத்த பூக்கும் தருணத்தில் ஒரு லிட்டருக்கு 2 மிலி குளோரிபைரிபாஸ் என்ற அளவில் மற்றும் காய் பிடிக்கும் தருணத்தில் புரோபெனோபாஸ் லிட்டருக்கு 1 மில்லி கலந்து என்ற அளவில் தெளிக்கவும் . |
| தக்காளி | தற்போது நிலவும் பருவ சூழ்நிலையின் காரணமாக தாக்காளியில் பாக்டீரியா வாடல் நோயனது பரவலாக தென்படுகின்றது. இந்நோயானது வளரும் தாவரங்களை விரைவாக மற்றும் முழுமையாக வாடச் செய்வதாகும். தக்காளியின் கீழ் இலைகள் வாடுவதற்கு முன்பே விழுந்து விடும். தண்டு நாளங்களில் படையெடுத்து திசுக்களை மஞ்சள் பழுப்பு நிறமாக நிறமாற்றமடையச் செய்கின்றன. இதன் தாக்குதலை கட்டுப்படுத்த நாற்று நடும் பொழுது நாற்றிற்கு சேதம் ஏற்படாமல் நட வேண்டும். ஒரு ஹெக்டருக்கு 10 கிலோ பிளீச்ளீசிங்தூளை இடலாம் மேலும் வெண்டை – தட்டைப்பயறு – மக்காச்சோளம், மக்காச்சோளம் – தட்டைப்பயறு மற்றும் கேழ்வரகு – கத்தரி போன்றவற்றை பயிர் சுழற்சி முறையினை பின்பற்றி பயிரிடுவதன் மூலம் தக்காளியில் பாக்டீரியா வாடல்நோயைக் குறைக்கலாம். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | எதிர்வரும் கோடை காலங்களில் பழத் தோட்டத்தின் தென்மேற்கு பகுதியில் தடுப்பு அமைப்பதன் மூலம் நேரடியாக சூரிய ஒளி பழங்கள் மீது படுவது குறைப்பது மட்டுமில்லாமல் சூரிய ஒளி மற்றும் வெப்பநிலை தாக்குதலையும் குறைக்கலாம். வறண்ட வானிலை தொடர்வதால் அனைத்து பயிர்களுக்கும் நீர்ப்பாசனம் செய்து மூடாக்கு இட்டு மண் செய்யவும் மண் ஈரப்பதம் பாதுகாக்கவும் . |